**கவனிக்க.**-*2022.08.12 ஆந் திகதிய 2293 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி* II *(தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி* IV*(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2294 - 2022 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2022.08.19**

*2294 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1272 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1275 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1277 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1270 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து மாதம் 05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து மாதம் 05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2022, ஓகத்து மாதம் 05ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1269 - B 082373 - 5,403 (2022/08)

# ஆய விற்பனையும் குத்தகையும்

பி.செ./ நீர்/ 01/11/கள்ளுத்தவறணை-2023

## நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு

## 2023 ஆம் ஆண்டிற்கான கள்ளுத் தவறணைகளுக்கான விலைமனு கேள்விப்பத்திரம்

1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக கள்ளுத் தவறணை விற்பனை செய்வதற்கான கீழ்வரும் கள்ளுத் தவறணைகளுக்கு 2023, தை மாதம் 1 ஆந் திகதி முதல் 2023, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின் கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2022.09.23ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சகல கேள்விகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் , (சொத்துப் பத்திரம் தாங்கள் முன்வைக்கும் கேள்வி பெறுமதியில் 15% வீதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது). அதற்குரிய உறுதியின் பிரதியையும் வழங்க வேண்டும்.

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "இலக்கம் ....................குறிக்கும் ................கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரம்" என இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி 2022. 09.23 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2022.09.23 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளல் நிறைவடைந்தவுடன் பின் உடனே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். அத்தருணம் சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

6. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப் பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

7. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத கள்ளுத் தவறணை மற்றும் வெளிநாட்டு மதுபானம் 2022.10.25 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தை கையளிக்கும் நபர் "தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் " எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகைப் பணம் போன்ற இரு மடங்கிற்கு குறையாத பணத்தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

9. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

(தொ.பே.இல.031-2224633)

10. இக்கேள்வி விற்பனை தொடர்பான எனது முடிவே இறுதி முடிவாகும்.

ஏ. யு. பதிரண,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2022, ஓகத்து.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை யின் இலக்கமும் பெயரும் | கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூ . ச. | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நீர்கொழும்பு | இல. 10 -செத்தப்பாடுவ | செத்தப்பாடுவ கிராமம் மட்டும் | மு.ப.11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 2. | நீர்கொழும்பு | இல.11- பசியாவத்த | பசியாவத்தை கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 3. | நீர்கொழும்பு | இல. 12 - பிட்டிபனை | பிட்டிபனை கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 4. | நீர்கொழும்பு | இல. 15 - குரண | குரண கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 5. | நீர்கொழும்பு | இல. 16 - காமாச்சி ஓடை | காமாச்சி ஓடை கிராமம் மட்டும் | மு. ப. 11. 00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 6. | நீர்கொழும்பு | இல. 17 - உடையார் தோப்பு | உடையார் தோப்பு கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 7. | நீர்கொழும்பு | இல. 18 - குடாபாடுவ | குடாபாடுவ கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 8. | நீர்கொழும்பு | இல. 19 - தலுபத்த | தலுபத்த கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2022.09.23 மு.ப. 10.30 |

| தொடர் இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூ . ச. | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 9. | நீர்கொழும்பு | இல. 20 - போருதொட்ட | போருதொட்ட கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 10. | நீர்கொழும்பு | இல. 21 - கொச்சிக்கடை | கொச்சிக்கடை கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2022.09.23 மு.ப. 10.30 |
| 11. | நீர்கொழும்பு | இல. 22 - பலங்கதுர | பலங்கதுர கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,500 | 2022.09.23 மு.ப. 10.30 |

08 - 139/1

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பதுளை மெடேரியா வீதி, இல. 13 ஐச் சேர்ந்த ஆறுமுகம் கதிரேசன் ஸ்ரீதரன் (கடவுச் சீட்டு இல. PA7078744) ஆகிய நான், பதுளை மெடேரியா பார் (மெடேரியா வீதி) இல. 13 ஐச் சேர்ந்த ஜானகி விஸ்பநாதன் (தே. அ. அ. இல. 416820503V) இற்கு என்னால் வழங்கப்பட்ட சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு A.P. கணபதிப்பிள்ளையினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2017.02.06 ஆம் திகதியிடப்பட்ட அற்றோனித் தத்துவ இலக்கம் 6620ஐ நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். அத்துடன் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் இதன் பிறகு மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் பற்றி எந்த வகையிலும் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

08- 120

---

## அரிஸ்டா ஃபேஷன் ஹோல்டிங்ஸ் (பிவிடி) லிமிடெட்

## உறுப்பினர்களின் தன்னார்வ ஒப்பந்தம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு

பங்குகள் மூலம் வரையறுக்கப்பட்ட நிறுவனம் - நிறுவனத்தின் இல. பீவீ 121452

2022.08.07 ஆந் திகதி மோரட்டுவ லக்ஷபதிய, அங்குலான, ஸ்டேஷன் வீதி, இலக்கம் 83/ 14 இல் இடம்பெற்ற மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தின் பங்குதாரர்களின் கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டு பின்வரும் தீர்மானம் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சிறப்புத் தீர்மானம் : உறுப்பினர்கள் தானாக முன்வந்து வெளியேறுதல்

"கம்பனி தன்னார்வத் துண்டிக்கப்பட்டது என்றும், திருமதி கே.ஜி.ஏ. லசந்திகா ருக்ஷானி சட்டத்தரணி, இல. 34/ 1/ 28, வழக்கறிஞர்கள் அலுவலக வளாகம், புனித செபஸ்டியன் மலை, கொழும்பு 12, நிறுவனத்தின் லிக்விடேட்டராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது."

கே.ஜி. ஏ. லசந்திகா ருக்ஷானி,
லிக்விடேட்டர்.

இல. 34/ 1/ 28,
வழக்கறிஞர்கள் அலுவலக வளாகம்,
புனித செபஸ்டியன் மலை,
கொழும்பு 12.

8- 127/ 1

**அரிஸ்டா ஃபெஷன் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**

**உறுப்பினர்களின் தன்னார்வ ஒப்பந்தம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழ் பணமதிப்பிழப்பு அதிகாரி நியமனம் பற்றிய அறிவிப்பு**

*கம்பனியின் பெயர்:* அரிஸ்டா ஃபேஷன் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (PV 121452)

*பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தின் முகவரி :* இல. 83/14, அங்குலான நிலைய வீதி, லக்ஷபதிய, மொரடுவ.

*லிக்விடேட்டர்களின் பெயர்:* கே. ஜி. ஏ. லசந்திகா ருக்ஷானி இல. 34/ 1/ 28 வழக்கறிஞர்கள் அலுவலக வளாகம், புனித செபஸ்தியன் மலை, கொழும்பு 12.

*நியமனத் திகதி:* 2022.08.07

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

8- 127/ 2

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் குருநாகல், சுமங்கள மாவத்தை, இல. 79 இல் வசிக்கும் களுவாஹந்தி ஜெஸ்மி சாமனி ஆகிய என்னால் குருநாகல், சுமங்கள மாவத்தை, இல.71/1 இல் வசிக்கும் ஹந்துன்னெத்தி புபுது நிஷாந்த த சொய்சாவுக்கு வழங்கப்பட்ட சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு திரு. நளீன் ஜே எதிரிசிங்ஹவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2018.09.22 ஆந் திகதிய இல. 1093 எனும் விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இத்தினம் முதல் அற்றோணி தத்துவகாரரால் மேற்படி அற்றோணி அனுமதிப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பாக மாட்டேன்.

களுவாஹந்தி ஜெஸ்மி சாமனி.

2022, யூலை 19.

08- 136

---

**கம்பனி பெயர் மாற்றம் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8ம் பிரிவின் பிரகாரம்) 2022 யூன் 15ஆந் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

கம்பனியின் முந்தைய பெயர் :
எல் ஏ இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனியின் இல. : பீவீ 84990

முகவரி :
இல. 38, சென். மேரிஸ் வீதி, கல்கிசை,
தபால் குறியீடு : 10370

கம்பனியின் புதிய பெயர் :
பயோஃபுட் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்,
இல. 20/A, வல்பொல வீதி,
அக்கோனா, அங்கொடை.

08- 142

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அம்பன்பொல தபால், மாம்பிட்டிகம திவுல்வெல வீதி என்ற முகவரியில் வசிக்கும் வன்னி அதிபத்து முதியன்சேலாகே லசன்த சம்பத்குமார சந்திரசேகர (தே. அ. அ. இலக்கம் 830613390V) ஆகிய என்னால் வாரியபொலபாதெனிய. மடாடுவ இல. 111 என்ற முகவரியில் வசிக்கும் மலலஹெட்டிநாயக்க முதியன்சேலாகே ரமேஷ் தாரக விஜேரத்ன (தே. அ. அ. இல. 921041748V) என்பவருக்கு வழங்கப்பட்டதும், குருணாகல் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. பி. ஜீ. ரூபிகா விக்ரமதிலக என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 27 மற்றும் 2019 ஒற்றோபர் 10 ஆம் திகதியிட்ட விஷேட அற்றோணி தத்துவமான,து இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இத்தினத்திருந்து என்சார்பில் அற்றோணிதாரரினால் மேற்கொள்ளப்படும் எத்தகைய செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக நான் பொறுப்புதாரியல்ல எனவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

வன்னி அதிபத்து முதியன்சேலாகே லசன்த சம்பத் குமார சந்திரசேகர,
2022, ஓகத்து 09.

08- 143

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இராகுல் பண்டாரலியகே விஜித் சந்திரா சமரசிங்க அடையாள அட்டை இலக்கம் 622641437V என்ற அடையாள இலக்கத்தை கொண்ட திலனி 'தூவ' மதுக்கட்டுவ மார்வத்த என்ற முகவரியை வசிப்பிடமாக கொண்டவராகிய நான் இலங்கைச் சனநாயக குடியரசு சோசலிசக் குடியரசின் பொதுமக்களுக்கு அறியத்தருவது 29ஆந் திகதி ஒற்றோபர் 2021 திகதி முதல் என்னால் வழங்கப்பட்ட அற்றோனி தத்துவ இலக்கங்களான 196 மற்றும் 197 2013ஆம் ஆண்டு 10 மாதம் 9ந் திகதி காஞ்சான குணசேகர பெரேரா என்ற பிரசித்த நொத்தாரிசு மூலம் சொழும்பில் எழுதப்பட்டு ராமநாயக்க ஆராய்சிகே டொன் கமால் ஜயந்த ராமநாயக்க அடையாள அட்டை இலக்கம் 612753938V இல. 47/55 கீனகம ரோட் மகரகம முகவரியில் வசிக்கும் நபருக்கு வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவம் நீக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக செயலிழக்க செய்துள்ளேன் இனிமேல் எவ்விதமான சம்பந்தங்களுக்கும் நான் பொறுப்பு கொள்ள மாட்டேன் என இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இராகுல் பண்டாரலாகே விஜித் சந்திரா சமரசிங்க.

08- 146

---

## அற்றோனி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்தினபுரி மாவட்டத்தின் கொடக்கவெல பிரதேச செயலாளர் பிரிவில் அட்டகலம்பன்ன, எத்தலவத்த முகவரியில் வசிக்கும் (தே. அ. அ. இல. 841071255V) கொண்ட தனுஷ்க லக்பிரிய ஹேவாகமகே ஆகிய என்னால் அட்டகலம்பன்ன எத்தலவத்த கடேவத்த முகவரியில் வசிக்கும் (தே. அ. அ. இல. 841111320V) கொண்ட கங்கானம் கமகே தொன் கௌஷல்ய ஜயஸ்ரீநாத் என்பவரை எனது அற்றோணி அதிகாரியாக பெயர் குறிப்பிட்டு பெல்மதுளை பகிரங்க நொத்தாரிசு திரு. பிரதீப் மங்களவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட இலக்கம் 258 மற்றும் 2018,யூன் 08 ஆம் திகதிய அற்றோணி அதிகாரப்பத்திரம் இன்று முதல் இரத்துச செய்து அதிகாரமற்றதாக்கப்படுவதாக இலங்கை அரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தல் அறிவித்துக் கொள்கிறேன்.

தனுஷ்க லக்பிரிய ஹேவாகமகே

08- 152

---

## விசேட அற்றோனி பத்திரத்தை இரத்துச் செய்தல்

ஜாஎல, நிவந்தம, நாகஸ் பிளேஸில் இலக்கம் 412 இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 197633100663 உடைய தீகிரிகேவகே தொன் வருண நுஷான் மற்றும் தேசிய அடையான அட்டை இலக்கம் 19815290219 உடைய கஹனவிட்ட லியனகே தோன நிலூபா சந்தமாலி ஆகிய நான், எம்மால் ஜாஎல, வடக்கு பட்டகம இலக்கம் 146/சீ, என்ற முகவரியில் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இலக்கம் 460270790V உடைய தீகிரிகேவகே தொன் விக்டர் என்பவருக்கு என் சார்பாக செயலளற்றுவதற்கு கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. எ. டீ. டீ. அப்புஹாமி அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 506 மற்றும் 2019.08.02 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோனி பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதையும் இதன் பின்னர் குறித்த அற்றோனி பத்திரமானது வெற்றும் வெறிதும் ஆனது என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

டீ. டீ. வருண நுஷான் மற்றும்
கே. எல். டீ. நிலூபா சந்தமாலி,

2022.08.01.

08- 154

---

## விசேட அற்றோனி பத்திரத்தை இரத்துச் செய்தல்

ஜாஎல, நிவந்தம, நாகஸ் பிளேஸில் இலக்கம் 412 இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 197633100663 உடைய தீகிரிகேவகே தொன் வருண நுஷான் ஆகிய நான், என்னால் ஜாஎல, வடக்கு பட்டகம இலக்கம் 146/சீ, என்ற முகவரியில் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இலக்கம் 460270790V உடைய தீகிரிகேவகே தொன் விக்டர் என்பவருக்கு என் சார்பாக செயலாற்றுவதற்கு கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. ஏ. டீ. டீ. அப்புஹாமி அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 505 மற்றும் 2019.08.02 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோனி பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதையும் இதன் பின்னர் குறித்த அற்றோனி பத்திரமானது வெற்றும் வெறிதும் ஆனது என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

டீ. டீ. வருண நுஷான்,

2022.08.01.

08- 155

---

## அற்றோணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்

முஹுானுவட்டவன, கஞ்சுக்குளிய, 79A எனும் இலக்கத்தில் வசிக்கும் குருகமகே ஜயந்த மஞ்சுள பெரேரா (தே. அ. அ. இல.

743040694V) ஆகிய என்னால் இலிப்பதெனிய, மல்வத்த, முஹுணுவட்டவன மேற்கு, 280 ஆம் இலக்கத்தில் வசிக்கும் வர்ணகுலசூரிய மேக பிரபாத் பிரனாந்து (தே. அ. அ. இல. 903291001V) என்பவருக்கு வழங்கிய 2015 ஆம் வருடம் திசெம்பர் 17 ஆம் திகதி சிரிமல் ஏ. டபிள்யூ. பின்டோ பிரசித்த நொத்தாரிசு அவர்களால் சான்றுபடுத்திய 6116 ஆம் இலக்க அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்வதாகவும், இதன் பின் அந்த அட்டோர்ணி அதிகார பத்திரத்தினால் எமது அட்டோர்ணி தத்துவதாரரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் அறியத்தருகின்றேன்.

கூருகமகே ஜயந்த மஞ்சுல பெரேரா.

08- 164

---

### அற்றோனித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 147 ருஸ்கின் அவனியு, இலண்டன் E12 6PP, ஐக்கிய இராச்சியம் இடத்தில் மயில்வாகனம் மகாதேவன் அல்லது இராமாசாமி மயில்வாகனம் மகாதேவன் ஆகிய என்னால் கலைவாணி கோபாலரத்தினம் இலண்டன் மன்றாடியார் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிய அற்றோணித் தத்துவ பதிவிலக்கம் 34 பக்கத்தில் 7 ஆம் பிரிவில் 2280 தினப்புத்தகத்தில் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிய அற்றோணி அனுமதிப்பத்திரம் மூலம் கொழும்பு - 101/3A, சென் பெனடிக் வீதி, கொழும்பு - 13 எனும் இடத்தில் வசிக்கும் மைதிலி மயில்வாகனம் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவப்பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செல்லுப்படியற்றதாக்கப்படுகிறது.

மயில்வாகனம் மகாதேவன் அல்லது
இராமாசாமி மயில்வாகனம் மகாதேவன்,

08- 169

---

### அற்றோனி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹோமாகம, மாகம்மன இல. 294/1 எனும் முகவரியில் வசிக்கும் குஸ்ஸிகே விமலரத்ன பெரேரா (தே. அ. அ. இல. 640562919V) ஆகிய நான் ஹோமாகம பிட்டிபள வடக்கு, இல. 574 எனும் முகரியில் வசிக்கும் ஹெட்டி தந்திரிகே தொன் பியரத்ன விஜேசிங்ஹ (தே. அ. அ. இல. 195012302637) என்பவரை எனது அட்டோர்ணி தத்துவக்காரராக நியமித்து பகிரங்க நொத்தாரிசு திருமதி கேடி என் பொன்சேகாவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 05 மற்றும் 2015.10.03ம் திகதிய அட்டோர்ணி தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்வதாக சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். இதன் பிறகு மேற்படி அட்டோர்ணி தத்துவக்காரரால் மேலே சொல்லப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் சம்பந்தமாகவும் நான் பொறுப்பாக மாட்டேன் என சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

குஸ்ஸிகே விமலரத்ன பெரேரா

08- 170

---

## அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

பி.செ./ நீர்/ 01/11/வெ. மதுபானம் - 2023

### நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு

### 2023 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு மதுபானத் தவறணைகளுக்கான விலைமனு கேள்விப்பத்திரம்

1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக கள்ளுத் தவறணை விற்பனை செய்வதற்கான கீழ்வரும் வெளிநாட்டு மதுபானத் தவறணைகளுக்கு 2023, தை மாதம் 1 ஆந் திகதி முதல் 2023, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின் கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2022.09.23ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சகல கேள்விகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் , (சொத்துப் பத்திரம் தாங்கள் முன்வைக்கும் கேள்விப் பெறுமதியில் 15% வீதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது). அதற்குரிய உறுதியின் பிரதியையும் வழங்க வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "இலக்கம் ....................குறிக்கும் ................ வெளிநாட்டு மதுபானத் தவறனைக்கான கேள்விப்பத்திரம்" என இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி 2022. 09.23 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2022.09.23 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளல் நிறைவடைந்தவுடன் பின் உடனே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். அத்தருணம் சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

6. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப் பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

7. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத வெளிநாட்டு மாபானத்தவறணை 2022.10.25 ஆந் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தை கையளிக்கும் நபர் "தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் " எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகைப் பணம் போன்ற இரு மடங்கிற்கு குறையாத பணத்தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

9. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

(தொ.பே.இல.031-2224633)

10. இக்கேள்வி விற்பனை தொடர்பான எனது முடிவே இறுதி முடிவாகும்.

ஏ. யு. பதிரண,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2022, ஓகத்து 10.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை யின் இலக்கமும் பெயரும் | கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூ . ச. | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நீர்கொழும்பு | இல. 02 -கிறீன்பார் (வெளிநாட்டு மதுபானம்) | இல. 08 பிரிவு குண்டன்வில மட்டும் | மு.ப.11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000.00 | 2022.09.23 மு.ப. 10.30 |

8 - 139/2

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்*

*கண்டி மாவட்டம், கண்டி பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட இல.221, தல்வத்த கிராம அலுவலர் பிரவில் தல்வத்த கிராமத்தில் அமைந்துள்ள, ரொடுபிஹில்லவத்த ஒது பகுதி ரொடுபிஹில்லவத்த லொட் இல. 01 மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் L.A. de C. விஜேதுங்க என்பவரினால் 1973.12.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 5409/5 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5B மற்றும் 5A ஒரு பகுதி எனும் காணித்துண்டுகள் உரிமம் பெற்ற நில அளவையாளர் D.R. அமேந்திர என்பவரினால் 2016.02.26 ஆந் திகதி (மீளளவை செய்து ஒன்றிணைக்கப்பட்ட கிளை பிரிவு) தயாரிக்கப்பட்ட 2030 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 2, 3, 4 என ஒன்றிணைந்த காணியான பிரித்தெடுக்கப்பட்ட வரிப்பண இல. 102/147 (லொட் 02) 102/145 மற்றும் 102/146 (லொட் 03) மற்றும் (ரோஸ்னீத் எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 ஏக்கர், 30.33 பேர்ச் பரப்பளவானது.*

*இவ்வாதனம் இல. 396, கட்டுகஸ்தோட்டை பாதை, கண்டி எனும் முகவரியில் தனது பதிவு அலுவலகத்தை அமைந்துள்ள அஷோ கார்ஸ் ஜபான் (பிரைவெட்) லிமிடட் கடப்பாடுடைய தாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் பீ.எல்.சீ. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.*

**ஆதனத்தை வந்தடைதல்.**-*கண்டி நகரத்திலிருந்து மஹியங்கனை பிரதான பாதையில் சுமார் 03 கி.மீ. தூரம் தல்வத்த வரை வந்து வலதுபக்கமாகவுள்ள படைவீரன் சந்தன குமார கமகே மாவத்தைக்குப் பிரவேசித்து அம்மாவத்தையில் சுமார் 500 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

***2022.09.22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பிக்கும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.***

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2019.07.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.07.15 ஆந் திகதிய "மவ்பிம", "த ஐலன்ட் " மற்றும் " தினக்குரல் "ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,000.00 ரூபா.*

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** *முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ , இல.120, கொட்டுகொடல்ல வீதி, கண்டி. தொலைபேசி: 081-2223163, 081- 2234392, 081- 2223217.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.
தொலைநகல் இல.: 081-2210595/071- 8446374,
071- 496244
மின்னஞ்சல்:* wijeratnejayasuriya@ gmail.com

*08- 117*

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – அநுராதபுரம் கிளை

(முன்னர் ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆதனம் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை*

*அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு யூ. விஜேரத்ன அவர்களால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட, ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ பெயருக்கு எழுதப்பட்ட 2014.05.23 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 2250 என்ற ஈட்டு முறி,*

2015.03.12 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 2561 என்ற ஈட்டு முறி மற்றும் 2016.03.30 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 2880 என்ற ஈட்டு முறியின் கீழ், பெற்றுக் கொள்ள வேண்டிய பணத்தொகையை செலுத்துவதற்கு, திசாநாயக்க முதியன்சேலாகே லோரனி இனோகா திசாநாயக்க கடனாளியாக புறக்கணித்துள்ளதாலும், மற்றும் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, மிகுதி முற்பணம் வட்டியும் ஏலதாரரின் எல்லா கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ள,

இக் கீழ் விபரிக்கப்பட்ட காணியை என்னால் 13 ஆந் திகதி செத்தெம்பர் மாதம் 2022, பி. ப. 01.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

### அட்டவணை

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், கண்டி கம்பலாத கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், கனதர கோரளை, 246 வன்னியன்குளம் கிராம அலுவலர் பிரிவினுள் வன்னியன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள பி. காரியவசம் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2010.09.01 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 542 என்ற உறுதியில் விபரிக்கப்பட்டுள்ள காணியாவதோடு, அத்தோடு எஸ். பாலேந்திரன் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2010.06.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2010/01/74 இனுள் லொட் 04 பிரியந்த சமரதுங்க அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் 2010.11.02 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2010/537 என்ற வரைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 04 இல் காண்பிக்கப்பட்ட காணிப்பகுதி. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 18பே.) அல்லது 0.0462 ஹெக்டயார் இக்காணியில் உள்ள கட்டிடங்கள், இலைகுலை, பயிர்ச்செய்கை மற்றும் எல்லாம் சேர்த்து

**தீர்மானம் பற்றிய அறிவித்தல்களுக்காக.-** மேற்கொள்ளப் பட்ட தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக 2018.10.12 மற்றும் 2022.06.17 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும், 2018.10.25, 2018.10.29 மற்றும் 2022.06.24 ஆந் திகதியுடைய "மவ்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கு செல்லும் வழி.-** அநுராதபுர நகரத்தில் இருந்து புத்தகயா மாவத்தையூடாக மயிலகஸ் சந்தி வரை சென்று, நாகசேன மாவத்தையூடாக லேனின் மாவத்தை வரை பிரயாணம் செய்யும் பொழுது லேனின் மாவத்தையில் வலது பக்கம் திரும்ப 50 மீட்டர் வரை சென்று கொங்கிறீட் வீதியில் இடது பக்கம் திரும்ப 50 மீட்டர் வரை பயணம் செய்யும் பொழுது விடயமுடைய காணி வீதியில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் .-** உத்தேச கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 3500.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 2,000.00;
(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மேலும் கொள்வனவுத் தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். தவறினால் கொடுக்கப்பட்ட 10% திரும்பி செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

இந்த ஏல விற்பனை சுகாதார அமைச்சு மூலம் கொவிட் - 19 சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெறும்.

வேறு விபரங்களுக்கு, "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நெஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10."

தொலைபேசி இல. : 011- 2661828, 011-2661866.

எல். பி. சேனாநாயக்க,
சமாதான நீதவான்
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பீட்டாளர்
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200, 2வது மாடி,
புதுக்கடை வீதி, கொழும்பு - 12.
தொலைபேசி இல. : 011-2445393, 011-2396520.
தொலைநகல் : 011-2445393
மின்னஞ்சல் : senaservice@sltnet.lk

08 - 122

---

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

